அடிப்படையில் பேரவைத் தலைவரை ஒருமையில் பேசிய அந்தச் சம்பவத்தைச் சுட்டிக்காட்டாமல், வானொலியினரும், தொலைக் காட்சியினரும் விட்டுவிட்டார்கள் என்பது நான் ஏற்கெனவே சொல்லியதிலிருந்தே பேரவைக்குப் புரியும். அவர்கள் இப்படித் தான் கொஞ்ச நாட்களாக நடந்து வருகிறார்கள். அதுவும் கண் டிக்கத்தக்கது என்கிற வகையிலே இப்போதைக்கு விட்டுவிடலாம் என்று நினைக்கிறேன். திரு. ஆர். முருகையா பாண்டியன்.

திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் திருநாவுக்கரசு அவர்கள் பேசிக்கொண்டிருக்கின்றபோது ஒரு சில வார்த்தைகளால் சில குழப்பங்கள் ஏற்பட்டது. அந்த நேரத்தில் திருநாவுக்கரசு அவர் கள் சொன்ன வார்த்தை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது வேண்டாம். இன் னும் மோசமாகப் பேசினார் என்று வேண்டுமானால் இருக்கலாம். அது அவைக் குறிப்பிலே இருக்க வேண்டாம். அது வேண்டாம், டாக்டர் ச. ஆரோக்கியசாமி.

நன்பகல் 12–00

7. தாம் தன்னிலை விளக்கம்—தொடர்ச்சி.

(ஆ) பேசாததைப் பேசியதாக ''இந்து'' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது குறித்து ஓர் உறுப்பினரின் தன்னிலை விளக்கம்

டாக்டர் ச. ஆரோக்கியசாமி : பேரவைத் தலைவர் அவர் களே, இன்றைய ''இந்து'' நாளிதழில் * * என்று சொன்னது நான்தான் என்று அதாவது இவர் சொன்னார் என்று போடப்பட்டிருக்கிறது. மிகவும் பிற்பட்ட சிறுபான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்த என்னை வேண்டும் என்றே இந்து நாளிதழ் இப்படியாக என் பெயரைப் போட்டு, என்னுடைய பெயரை வேண்டுமென்றே இழுத்து இருக்கிறது என்பதையும், களங்கம் கற்பிக்கும் வகையில் என்னுடைய பெயரை, மிகவும் பிற்பட்ட சிறுபான்மை கிறிஸ்தவ பிரதிநிதியாக விளங்குகிற என்னை, மிக உயர்ந்த இடத்திலே இருக்கிற இந்துபத்திரிகை என்னை இப்படி இழிவுபடுத்தும் வகையில், என்னுடைய பெயரைக்களங்கப்படுத்து கிற வகையில் வெளியிட்டிருக்கிறது என்பதைத் தங்கள் மேலான கவனத்திற்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். நான் சொல்லாத வார்த்தையை, நான் செய்யாத தவறை வேண்டுமென்றே என் மீது இட்டுக்கட்டி போடப்பட்டிருக்கிற இந்தச் செய்திக்கு, எனது உரிமையைப் பறிக்கிற இந்தச் செய்திக்கு தாங்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : நானும் அந்தச் செய்தியைப் பார்த்தேன். அதைத்தான் திரு. தென்னவன் அவர்கள் தெரிவித்த கருத்துக்கும் சொன்னேன். ஒருவர் சொல்கிறார். இன்னார் சொன்னார் என்று அவர் பெயரைச் சொல்லிப் போடுகிறபோது, இங்கேயே செய்தியாளர்கள் இருக்கிறீர்கள். நீங்களே பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆரோக்கியசாமி செய்தார் என்று தெரிந்திருந்தால் நீங்களே போட்டிருக்கலாம். அப்படி இல்லாமல், அவர், நான் இல்லை என்று மறுத்துக் கூறுகிற அளவுக்கு ஒரு இடம் வைத்து, இன்னொருவர் சொன்னதை, இன்னொருவர் வாயிலாக இப்படி நடந்தது என்று போட்டிருப்பதே கூட மாண்புமிகு உறுப்பினருடைய உரிமையைப் பாதிக்கிற அளவில்தான் அமையும். எனவே அதுவும் கண்டிக்கத்தக்கது தான்.

எனவே அதை முறைப்படி நீங்கள் எழுத்து வடிவாக உரிமைப் பிரச்சினையாகக் கொடுத்தால் அதில் உரிய நடவடிக்கை எடுத்து உரிய வகையில் நான் மேல் நடவடிக்கை எடுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது தவிர நீங்கள் சொன்னதில் **என்று சொன்னீர்கள் அதில் நீங்கள் சொன்னது போல் சிறுபான்மையோர் என்று வருகிறபோது ஏதோ * என்பதைப் போல அந்த வார்த்தை அமைந்து விடும். 'இவ்வளவு மிகச் சிறந்த பத்திரிகையான இந்து' என்று வேண்டுமானால் வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் நேரடியாக 'இந்து' என்பதோடு நின்றிருக்கிற காரணத்தால் அது வேறு வகையிலே பொருள் கொள்ளப்பட்டுவிடும். எனவே மிக உயர்ந்த இடத்தில் இருக்கிற இந்துப் பத்திரிக்கை என்று அதைத் திருத்துமாறு கேட்டுக் கொள்கிறேன். அது அவ்வாறு திருத்தப்படுகிறது.

9. மானியக் கோரிக்கைகள், 1993-94— விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 2—ஆயத்தீர்வைத் துறை—தொடர்ச்சி

(ஆ) கோரிக்கை எண். 15— காவல் துறை—தொடர்ச்சி.

(இ) கோரிக்கை எண். 16— தீயணைப்புப் பணிகள்—தொடர்ச்சி

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 20-4-1993 அன்று கோரப்பட்ட மானியக் கோரிக்கைகள் மீது விவாதம்—தொடர்ச்சி. திரு எஸ். வி. சண்முகம்.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.